11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

53. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு சுத்திகரிப்பு விதியில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 5-8-1993-ஆம் நாளிட்ட 177-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

54. 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களுக்கு (கல்வி நிலையங்களில் இடங்களையும், அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளையும் ஒதுக்கீடு செய்தல்) சட்டம் குறித்து பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் நலத்துறையின் 19-7-1994-ஆம் நாளிட்ட 28-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களுக்கு (கல்வி நிலையங்களில் இடங்களையும், அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளையும் ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 45/1994) 8(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

55. தமிழ்நாடு நகர்ப்புற - அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் 1993-94-ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்களின் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பட பெற்றது). (தமிழ் ஆங்கிலம்)

56. 1992-93-ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (சிவில்) (எண் 3) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).

57. தமிழ்நாடு அரசின் 1992-93-ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).

1994 நவம்பர் 10]

58. தமிழ்நாடு அரசின் 1992-93-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).

59. 1992-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ஆம் நாளன்று தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்ட திரு இராமசாமியின் மகன் திரு. நந்தகோபால் என்பவர் இறந்துவிட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டின் மீதும், 1992-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 2-ஆம் நாளன்று திருமதி பத்மினி காவலர்களால் மேற்படி காவல் நிலையத்தில் கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் மீது விசாரணை செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. என். பழனியப்பன் விசாரணைக் கமிஷனின் அறிக்கை. (1952-ஆம் ஆண்டு விசாரணை கமிஷன் சட்டம் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

60. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம் பொன்னூர் கிராமத்தில் செங்குந்தர்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் இடையே 8-1-1992-ஆம் நாளன்று நிகழ்ந்த மோதல் குறித்து விசாரிக்க நீதித்துறை உறுப்பினர் ஆர்.சி.டி. ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி (நிலை-1) திரு கே. வரதன், அவர்கள் நடத்திய விசாரணைக் கமிஷன் சட்டம் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

61. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1990-91-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது).

62. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1948-ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69(5) (ஏ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் ஆங்கிலம்).